***கவனிக்க.-*** *2010.05.21 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

***கவனிக்க.-*** *இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியவை சிங்களம் மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரசுரிக்கப்படுகின்றன.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1656 - 2010 මැයි 26 වැනි බදාදා - 2010.05.26**

*1656 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | – |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 988 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, யூன் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, மே மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

ஹோமாகம புதிய நகர சபை ஸ்தாபித்தல்

*கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் 'ஹோமாகம நகர சபை' என்னும் பெயரில் புதிய நகர சபை ஒன்று ஸ்தாபிப்பதற்கு முன்வைக்கப்பட்ட பிரேரணை தொடர்பாக ஆய்ந்து அவதானித்து விதந்துரை சமர்ப்பிப்பதற்காக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் கௌரவ அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் அவர்களினால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.*

*இக்குழுவின் மூலம் ஹோமாகம நகரசபை ஸ்தாபிக்கப்பட்டதன் பின்பு திருத்தங்கள் மற்றும் ஹோமாகம பிரதேச சபையின் எல்லை விபரம் அதனுடன் கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவும், சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கையும், உத்தேசிக்கப்பட்ட ஹோமாகம நகர சபையின் எல்லை விபரம், அதனுடன் கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவும், சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கையும், சிபாரிசு செய்யப்பட வேண்டும்.*

*இது தொடர்பாக கவனத்தில்கொள்ளும் பொது மக்களின் கருத்துக்கள் விசாரணைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருப்பதுடன், கருத்துக்களும், பிரேரணைகளும் முன்வைப்பதற்கு விரும்பும் மக்கள், பொதுஜன அமைப்பு மற்றும் வேறு நிறுவனங்கள் தங்களின் எழுத்துமூலமான கருத்துக்களையும், பிரேரணைகளையும் 2010.06.30 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்போ குழுவின் செயலாளருக்கு சமர்ப்பிக்கும்படி தயவுடன் தெரிவித்துக்கொள்கிறோம். வாய்மூலமான பிரேரணைகள் முன்வைப்பதற்கு விரும்புபவர்கள், குழுவின் செயலாளருக்கு அறிவித்து திகதியையும், நேரத்தையும் பெற்றுக்கொண்டு 2010.06.22 ஆந் திகதிக்கு முன்பு தங்களின் கருத்துக்களை சமர்ப்பிக்கும்படி தயவுடன் தெரிவிக்கிறேன். ஹோமாகம பிரதேச செயலாளர் காரியாலயத்திலே 2010.06.28 ஆந் திகதி மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 2.00 மணி வரை வாய்மூல காரணங்களை முன்வைப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது.*

*டி. எச். சந்திரசிறி,*
*குழு செயலாளர்,*
*உள்ளூராட்சி உதவி ஆணையாளர் (கொழும்பு),*
*உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் (கொழும்பு),*
*ஹைலெவல் பிளாசா,*
*தெல்கந்த,*
*நுகேகொடை,*
*தொ. இல. 0112829886*

*ஏ. ஜே. கருணாரத்ன,*
*குழு தலைவர்,*
*பிரதேச செயலாளர்,*
*ஹோமாகம.*
*தொ. இ. : 011-2855967*

*5-741*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.